**OS.NO: 22/2024**

**PW : 2 (** மகாலட்சுமி க/பெ.ரவி**)**

நாள் : 10.07.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :**

இந்த வழக்கில் நான் 4ம் வாதி ஆவேன். மற்ற வாதிகள் எனது சகோதரிகள். இந்த வழக்கில் ஏற்கனவே எனது சகோதரி மல்லிகா சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அவர் எனக்காகவும் சேர்த்து தான் சாட்சியம் அளித்துள்ளார் என்று சொன்னால் சரிதான். வழக்கறிஞர் அவ்வாறு கூறிவிட்டார். எனது கூற்றின் படி எனது வழக்கிறிஞர் செய்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. வாசா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டார் என்றால் சரிதான். அவர் குறுக்கு விசாரணையில் வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். என்றுடைய சகோதரி மல்லிகா தாக்கல் செய்த பிராமாண வாக்குமூலத்திற்கும் என்னுடைய பிராமாண வாக்குமூலத்திற்கும் எந்த வித்தியசமும் இல்லை என்று சொன்னால் சரிதான். ஆகையால் எனது சகோதரி மல்லிகா குறுக்கு விசாரணையில் ஏதாவது தவறுதலாக கூறியிருந்தால் அதனை சரிசெய்வதற்காக நான் சாட்சியாக வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆகையால் எனக்காகவும் மற்ற வாதிகளுக்காகவும் வாசா.1 சாட்சியம் அளித்துள்ள நிலையில் அதனை திருத்துவதற்காக நான் சாட்சியம் அளிப்பது ஏற்க தக்கது அல்ல என்று சொன்னால் எனது சகோதரி தவறுதலாக எதுவும் கூறவில்லை. ஆகையால் என்னை மேற்கொண்டு குறுக்கு விசாரணை செய்யவேண்டிய எழவில்லை என்று சொன்னால் சரிதான்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

**ஒம்./-திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**